2007 ஏப்ரல் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

9—

கிளை அச்சகம்

***16279—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் கிளை அச்சகம் ஒன்றை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை. எனவே, வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் ஒரு கிளை அச்சகம் துவக்க வேண்டுமென்று வினா எழுப்பியிருக்கின்றேன். காரணம், அரசுப் பணிகளுக்கும், அரசு அலுவலகங்களுக்குத் தேவையான ஸ்டேஷனரிக்கும், அழைப்பிதழ் போன்றவற்றிற்கும் கோவை மாவட்டத்திற்குத்தான் வர வேண்டும். அங்கேயிருந்து 100 கிலோ மீட்டர் தூரம் கோவைக்கு வர வேண்டியிருக்கிறது. அரசினுடைய பணமும் வீணாகிறது; நேரமும் வீணாகிறது. ஆகவே, அரசு ஒரு கிளை அச்சகத்தை வால்பாறையிலே துவக்குவதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அச்சகங்கள் சென்னையிலே இரண்டு இருக்கின்றன; மதுரையிலே இரண்டு இருக்கின்றன; சேலத்தில் ஒன்று, புதுக்கோட்டையில் ஒன்று, திருச்சியில் ஒன்று, விருத்தாசலத்தில் ஒன்று என இந்த இடங்களிலே எல்லாம் கிளை அச்சகங்கள் இருக்கின்றன.

தேவையான அரசு ஆவணங்களை அச்சடிக்க இந்த அச்சகங்களே போதுமானவையாக இருக்கின்றன. வால்பாறைக்குத் தேவையானவை சேலத்திலும், திருச்சியிலும், மதுரையிலும் அச்சடிக்கப்பட்டு வருகின்றன. தற்போது நவீனமயமாக்கும் திட்டம் நிறைவேற்றப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முழுவதும் நவீனமயமாக்கப்பட்டபின் தரமாக, இன்னும் கூடுதலாக அச்சிடும் பணியைச் செய்ய இயலும். எனவே, வால்பாறையில் தனியாக அச்சகம் நிறுவத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியின் நோக்கமே, சுமார் 30 ஆயிரம் பேர்கள் வால்பாறையைவிட்டுத் திருப்பூருக்கு வேலைக்கு வந்துவிட்டார்கள். அங்கே வேலைவாய்ப்பு ஒன்றுமே கிடையாது. இப்படி ஒரு கிளை அச்சகத்தை உருவாக்கினாலாவது அங்கே வேலைவாய்ப்புக் கிடைக்குமா என்பதற்காகத்தான் இந்தக் கேள்வியையே கேட்டிருக்கின்றேன். ஆகவே, பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மீண்டும் பரிசீலனை செய்வாரா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: தேவை ஏற்படின், அரசு இது குறித்துச் சிந்திக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

திரு. தி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசினுடைய செய்தி, விளம்பரப் படங்கள் இதற்கு முன்பு எல்லாத் திரையரங்குகளிலும் கண்டிப்பாகக் காட்டப்பட்டன. ஆனால் இப்போது இல்லை என்று நினைக்கின்றேன். அவற்றைத் திரையரங்குகளிலே விளம்பரப்படுத்துவதோடு, டி.வி. சேனல்களிலும் அரை மணி நேரம் கொண்டு வருவதற்கான முயற்சியைத் தமிழக அரசு எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு செய்திப் படம் எல்லாத் திரையரங்குகளிலும் காட்டப்பட்டு வருகிறது. அதேபோல, பொது மக்கள் கூடுகின்ற இடங்களில் எல்லாம்

2007 ஏப்ரல் 2]

அரசு சின்னத் திரைகள்மூலமாக அரசினுடைய அத்தனை சாதனைகளும் எடுத்துக் காட்டப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு.

திரு. த. தியோடர் ரெஜினால்டு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய அரசு அச்சகமானது, என்னுடைய தொகுதியில் தக்கலையில் உள்ளது. அது போதிய நிதி இல்லாமல், பணியாளர்கள் இல்லாமல், நவீன அச்சு இயந்திரங்கள் இல்லாமல், நவீன யுக்திகள் கையாளப்படாமல் மிகவும் பின்தங்கிய நிலைமையில் உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போதிய நிதியை ஒதுக்கி, பணியாளர்களை அமர்த்தி, நவீன இயந்திரங்களைப் புகுத்தி, நவீன யுக்திகளைக் கையாண்டு, அதைப் புனரமைக்க முன்வருவார்களா என்பதையும், அது அரசு நிலத்தில் உள்ளது, தேவைப்பட்டால் என்னுடைய தொகுதி நிதியிலிருந்து நான் கட்டடங்களைக்கூடக் கட்டிக் கொடுக்கத் தயாராக இருக்கின்றேன்; என்னுடைய மாவட்டத்தினுடைய அச்சகமான காரணத்தினால், அதில் தனிக் கவனம் செலுத்தி அதை நவீனப்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டு பகுதி–II திட்டத்தில், இந்தத் துறையிலுள்ள அச்சகங்களை ரூ.193.15 இலட்சம் செலவில் கணினிமயமாக்கவும், உபகரணங்களைப் புதுப்பிக்கவும் அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டடம் கட்டித் தருவதாக உறுதியளித்திருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.